7.	Construction of Nizhal Mandapam for Comprehensive Building	91,26,566/-	55,700/-	12 Months

EMD Should be paid Only in Online Mode
Important Details : Bidding document and revision if any obtained only from website https://tntenders. gov.in. Not in newspaper.

1.	E – Tender documents can be downloaded at free of cost from	:	23.11.2026 to 10.12.2026 upto 2.00 pm.
2.	E – Tender documents can be uploaded	:	10.12.2026 upto 02.00 pm.
3.	E – Tender Opening date and time	:	10.12.2026 at 4.00 pm.

R. Karthikeyan. Deputy Commissioner / Executive Officer.
Anjan Lokamitra, Hereditary Trustee
DIPR.3562/Tender/2026

GOVERNMENT OF INDIA – DEPARTMENT OF SPACE
CONSTRUCTION & MAINTENANCE GROUP, SDSC – SHAR
SRIHARIKOTA – 524124
Brief E-TENDER NOTICE
No: SHAR: CMG CIVIL:MAINT:E-PT-15/26-27 Dt: 12.11.2026
On behalf of President of India, Item Rate tenders are invited through e-tendering for following works;

Name of Work	Tender No	Estimate Cost
Term contract for 2026-2027 at SMP&ETF area, SDSC SHAR.	T/C-26-030	₹ 100 Lakhs
External painting of common facilities and amenity buildings at PNN and SMN Colony & Pulicat Nagar, Sullurupeta.	T/C-26-031	₹ 71.05 Lakhs
Internal painting of 200 Nos quarters in Pulicat Nagar, Sullurpeta.	T/C-26-032	₹ 48.55 Lakhs
Providing BT topping to approach road extension of parking area in front of Admin Complex, Keepakam, SDSC SHAR.	T/C-26-033	₹ 28.55 Lakhs

Tender documents can be downloaded up to **26.11.2026**, **14:30** hrs. **For eligibility criteria and other details, interested tenderers may please refer to the detailed bilingual (Hindi-English) Notice Inviting Tenders (NIT) on the website https://www.isro.gov.in/Tenders.html and tender free view at https://www.tenderwizard.com/isro**
Sd/- GROUP HEAD, CMG/ SDSC SHAR

TAMILNADU MEDICAL SERVICES CORPORATION LIMITED
(A Government of Tamilnadu Undertaking)
No. 417, Pantheon Road, Egmore, Chennai - 600 008. Phone: 044-2819 1890, 2819 0259
Website: www.tnmsc.tn.gov.in E-Mail: gmdrug.tnmsc@tn.gov.in, mngrpurdrug.tnmsc@tn.gov.in
Online Tenders is invited by the Tender Inviting Authority, Tamilnadu Medical Services Corporation Limited, Chennai – 600008, from the bidders meeting the eligibility criteria indicated in the tender document for the supply of **Food for Special Medical Purposes for Rare Diseases** to TNMSC Ltd for one year from the date of acceptance of the tender.

Sl. No.	Description	e-Tender Reference	Tender Floating Period	e-Tender Submission Duration	Date and time of online opening of Technical Bids
1.	Online Re-Tender for the supply of **Food for Special Medical Purposes for Rare Diseases** to TNMSC Limited under rate contract system for one year from the date of acceptance	e-028/M(P)/ RE-FSMP-ICH/ TNMSC/2026, Dated. 13.11.2026	13.11.2026 at 4.00 PM to 15.12.2026 upto 3.00 PM	24.11.2026 at 10.00 AM to 15.12.2026 upto 3.00 PM	15.12.2026 at 4.00 PM

The tender document can be downloaded and the tender shall be submitted at **https://tntenders.gov.in/.** The tender document can also be downloaded at **www.tnmsc.tn.gov.in** for reference purpose.
DIPR/3557/Tender/2026
Tender Inviting Authority / General Manager (Drugs)

கள்ளக்குறிச்சி எம்எல்ஏ மீது நடவடிக்கை தேவை



சென்னை, நவ. 12: கள்ளக்குறிச்சி எம்எல்ஏ மீது முதல்வர் ஜோசப் விஜய் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் வியாழக்கிழமை வெளியிட்ட பதிவு:

'தவறு செய்தால் விடமாட்டேன்' என முதல்வர் விஜய் தனது கட்சி எம்எல்ஏ-க்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார் என தவறான தகவலை ஊடகங்கள் மூலம் பரப்பியுள்ளனர். முதல்வரின் கண்டிப்பு உண்மையானால் என்ன செய்திருக்க வேண்டும்? பேரவைத் துணைத் தலைவர் பதவியின் மாண்பைக் குலைத்தவர் மீது வழக்குப் பதிவு செய்திருக்க வேண்டும். கள்ளக்குறிச்சி எம்எல்ஏ மீது உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் கண்டிப்பான அதிகாரியாக செயல்படுவேன் என சொன்னவர் செய்தது என்ன? குற்றஞ்சாட்டப்பட்ட இருவருக்கும் தீபாவளிப் பரிசு கொடுத்து வழியனுப்பி வைத்திருக்கிறார். இதுதான் அந்தக் கடும் நடவடிக்கையா? உறுதியான, நிலையான முடிவை எடுத்து, தன்னை முதல்வர் நிரூபித்துக் காட்ட வேண்டும். வாய் மட்டும் வேலை செய்து எந்தப் பயனும் இல்லை எனப் பதிவிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்: கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியருக்கு தகாத தகவல் அனுப்பிய குற்றச்சாட்டில் தவெக எம்எல்ஏ அருள் விக்னேஷை முதல்வர் இன்னமும் பாதுகாப்பது ஏன்? கோரிக்கை வைத்தவரை அடித்து துன்புறுத்திய பேரவைத் துணைத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? தவறு செய்யும் தன் கட்சிக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க முதல்வருக்கு துணிச்சல் இல்லை.

ஆனால், அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம், தவெக எம்எல்ஏ-க்களுடன் ஆலோசனைக் கூட்டம் என்று வேக வேகமாக திசைதிருப்பும் அரசியலில் முதல்வர் இறங்குகிறார். முதல்வருக்கு மனசாட்சி இருந்தால் தவறு செய்யும் தவெகவினரைத் தட்டிவைக்க வேண்டும். இல்லை மக்கள் சக்தி தட்டிவைக்கும்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தால் சந்திக்க தவெக அரசு தயார்



கோபி, நவ.12: தவெக சட்டப்பேரவை உறுப்பினர்களிடமிருந்து எந்தக் கடிதமும் பெறப்படவில்லை. அதே நேரத்தில், எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தால் அதனை சந்திக்க தவெக அரசு தயாராக உள்ளது என அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறினார்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையத்தில் வியாழக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தவெக அரசு மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரும் எண்ணத்தில் இல்லை. அவ்வாறு கொண்டுவந்தால் அதனைச் சந்திக்க தவெக அரசு தயாராக உள்ளது.

ஒவ்வொரு இயக்கங்களும் ஆட்சிக்கு வரும்போது, சட்டப்பேரவை உறுப்பினர்களை அழைத்து என்னென்ன திட்டங்களை நிறைவேற்றுவது என்பது குறித்து ஆலோசிப்பது வழக்கம். அதுபோலதான் முதல்வர் ஜோசப் விஜய் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டப்பேரவை உறுப்பினர்களிடமிருந்து எந்தக் கடிதமும் பெறப்படவில்லை என்றார் அவர்.

சட்டம்–ஒழுங்கு ஆய்வுக் கூட்டம்...



தமிழக சட்டம்– ஒழுங்கு, சிறைத்துறைச் செயல்பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் முதல்வர் ச.ஜோசப் விஜய் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற ஆய்வுக் கூட்டம். உடன் சட்டத் துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார், தலைமைச் செயலர் மு.சாய்குமார், உள்துறைச் செயலர் ஆ.கார்த்திக், தமிழக காவல்துறை தலைமை இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை இயக்குநர் கி.சங்கர், சென்னை மாநகர காவல் ஆணையர் அ.அமல்ராஜ் உள்ளிட்ட உயரதிகாரிகள்.

ஜெம் வீரமணிக்கு எதிரான முதல் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல்: சிறப்பு புலனாய்வுக் குழு

சென்னை, நவ. 12: சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெம் கிரானைட்ஸ் உரிமையாளர் வீரமணிக்கு எதிரான முதல் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, சிறப்பு புலனாய்வுக் குழு தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தது.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த தாக, ஜெம் வீரமணிக்கு எதிராக 9 போக்ஸோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்கை மூடி மறைத்ததில் காவல் துறை உயர் அதிகாரிகளின் தொடர்பு இருப்பதாலும், பணம் கைமாறி இருப்பதாலும், இந்த வழக்குகளின் விசாரணையை சிபிஐக்கு மாற்றக் கோரி உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

மேலும், வழக்கு தொடர்பான விடியோக்கள் ஊடகங்களில் வெளியானது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரி, துளிர் அமைப்பு சார்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த வழக்குகள் நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தன. அப்போது, சிறப்பு புலனாய்வுக் குழு தரப்பில் ஆஜரான தலைமை குற்றவியல் வழக்குரைஞர் ஜான் சத்யன், வீரமணிக்கு எதிரான முதல் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இரு வழக்குகளில் 10 நாள்களில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படும். குற்றம்சாட்டப்பட்டுள்ள முக்கிய நபரான பிரகாஷ் தலைமறைவாக உள்ளார். அவரது முன்பிணை கோரிய மனு நவ.16-ஆம் தேதி விசாரணைக்கு வருகிறது.

பணப் பரிமாற்றம் தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்த வேண்டியுள்ளது. இந்த வழக்கின் தீவிரத் தன்மை கருதி, சிறப்பு புலன் விசாரணைக்கு குழு தரப்பில் ஆஜராக 3 சிறப்பு அரசு வழக்குரைஞர்களை நியமித்து கடந்த நவ. 6-ஆம் தேதி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, வழக்குகளின் விசாரணையை நவ. 30-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

வழக்கில் ஏடிஜிபி அருண், 6 காவல் அதிகாரிகள் சேர்ப்பு

சென்னை, நவ. 12: சிறுமிகள் பாலியல் வன்கொடுமை தொடர்பான ஜெம் வீரமணிக்கு எதிரான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் ஏடிஜிபி அருண் உள்ளிட்ட 7 காவல் துறை அதிகாரிகளின் பெயர்கள் சேர்க்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணையில், சிறுமிகளை வீரமணி பாலியல் வன்கொடுமை செய்தது குறித்து கடந்த 2025 அக்டோபரில் சென்னை காவல் துறையில் விடியோ ஆதாரத்துடன் புகார் செய்யப்பட்டதும், ஆனால், வழக்குப் பதிவு செய்துவிட்டு, விடியோவில் இருப்பவர்கள் யாரென்று தெரியவில்லை என்று காவல் துறை வழக்கை முடித்து வைக்க முயன்றதும் தெரியவந்தது. அப்போது காவல் ஆணையராக இருந்த ஏடிஜிபி ஏ.அருண், சென்னை மத்திய குற்றப் பிரிவு கூடுதல் காவல் ஆணையராக இருந்த ஐஜி ராதிகா, உதவி ஆணையராக இருந்த யாஸ்மின் உள்ளிட்ட பலரிடம் விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசாரணையில் கிடைத்த தகவலின் அடிப்படையில், தற்போது வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் ஏடிஜிபி அருண் உள்ளிட்ட 7 காவல் துறை அதிகாரிகளின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வாரிய குடியிருப்பு நிலுவைத்தொகை பயனாளிகளுக்கு வட்டித் தள்ளுபடி

தமிழக அரசு உத்தரவு

சென்னை, நவ. 12: வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கான தவணை செலுத்துவோர் நிலுவைத்தொகை செலுத்தத் தவறிய நிலையில், அதற்கான வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு வியாழக்கிழமை அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் தவணை முறை திட்டத்தில் மனை, வீடு மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்கள் தவணைக் காலம் முடிந்த பிறகும் 6,496 பேர் விற்பனைப் பத்திரம் பெறாமல் உள்ளனர்.

அவர்கள் முழுத் தொகையையும் செலுத்தாமல் இருப்பதால் விற்பனைப் பத்திரம் பெறமுடியவில்லை. தற்போது முதல்வர் அறிவுறுத்தல்படி, வாரிய குடியிருப்புகள் ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைக் குறைக்கும் வகையில் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இதுகுறித்து மாளியக் கோரிக்கை மீதான விவாதத்தில் துறை அமைச்சரால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி வீட்டு வசதி வாரியத்தில் தவணைக் கொள்முதல் திட்டங்களில் மனை, வீடு மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்கள் கடந்த மார்ச் 31-ஆம் தேதிக்குள் தவணைக் காலம் முடிவுற்ற திட்டங்களில், நிலுவைத் தொகை செலுத்தத் தவறிய நிலையில், அவர்களுக்கான முழுத் தொகையை ஒரே தவணையில் செலுத்துபவர்களுக்கான அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படுகிறது.

அத்துடன், வட்டி முதலாக்கத்தின் மீதான வட்டி தள்ளுபடியும் மற்றும் நிலத்தின் இறுதி நிலை வித்தியாசத்தில் வசூலிக்கப்படும் தொகைக்கான வட்டியில் ஒவ்வோர் ஆண்டுக்கும் 5 மாதங்களுக்கான வட்டித் தள்ளுபடி செய்து விற்பனைப் பத்திரம் வழங்கப்படும். இந்தத் திட்டம் ஓராண்டு காலத்துக்கு சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தால் வாரியத்துக்கு சுமார் ரூ.92.39 கோடி வருவாய் இழப்பு ஏற்படுவதுடன், சிறப்பு வட்டிச் சலுகையால் ஒதுக்கீட்டாளர்களுக்கு ரூ.18.45 கோடி தள்ளுபடி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலமானார் ஜெ.சுதா



சென்னை, நவ. 12: சென்னை கொரட்டூரைச் சேர்ந்த ஜெ.சுதா (44) உடல்நலக் குறைவு காரணமாக வியாழக்கிழமை (நவ. 12) காலமானார்.

அவருக்கு, தினமணி தருமபுரி பதிப்பில் முதுநிலை பக்க வடிவமைப்பாளராகப் பணியாற்றும் கணவர் வி.ஜெயப்பிரகாஷ், மகன் ஜெ.ஆண்டனி வின்சென்ட் உள்ளனர்.

ஜெ.சுதாவின் இறுதிச் சடங்குகள் சென்னை பூந்தமல்லியில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் வெள்ளிக்கிழமை நண்பகலில் நடைபெறவுள்ளன. தொடர்புக்கு: 9840873760.

தேவை

பதவி - தலைமைப் பாதுகாப்பு அதிகாரி மற்றும் பாதுகாப்பு அதிகாரி

DISH அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளிலிருந்து பொறியியல் பட்டம் / பட்டயப் படிப்பு / அறிவியல் பட்டம், அதனுடன் M.E / M.Tech – தொழில்துறை பாதுகாப்புப் பொறியியல் / தொழில்துறை பாதுகாப்பு மற்றும் இடர் மேலாண்மை மற்றும் மண்டல தொழிலாளர் நிறுவனத்திலிருந்து தொழில்துறை பாதுகாப்பில் பட்டயப் படிப்பு பெற்றிருக்க வேண்டும். மேலும்,

1. தலைமைப் பாதுகாப்பு அதிகாரி பதவிக்குக் குறைந்தபட்சம் 5 வருட அனுபவமும்,

2. பாதுகாப்பு அதிகாரி பதவிக்குக் குறைந்தபட்சம் 2 வருட அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

தமிழில் சரளமாகப் பேச, படிக்க மற்றும் எழுதத் தெரிந்திருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 5 நாட்களுக்குள் விண்ணப்பிக்கலாம்

மிச்செலின் இந்தியா பிரைவேட் லிமிடெட், A1, சிப்காட் தொழிற்பூங்கா, தேர்வாய் கண்டிகை கிராமம், கும்மிடிப்பூண்டி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், அஞ்சல் குறியீடு: 601202
Mail ID: Saranya.haribabu@michelin.com

செயிண்ட் ஜான் ஃபிரெய்ட் சிஸ்டம்ஸ் லிமிடெட்

நிறுவனச் சொத்தின் மின்னணு ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

நொடித்தல் மற்றும் திவால்நிலைச் சட்டம், 2016ன் கீழ் கலைப்பு நடவடிக்கையில் உள்ளது

தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு 26-11-2019 தேதியிட்ட உத்தரவு (11-03-2020 முதல் அமலுக்கு வருகிறது)

BAANKNET இணையதளம் மூலம் M/s. செயிண்ட் ஜான் ஃபிரெய்ட் சிஸ்டம்ஸ் லிமிடெட்டுக்குச் சொந்தமான கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள், **எந்த உத்தரவாதங்களும் இழப்பீடுகளும் இல்லாமல், உள்ள இடத்தில் உள்ளபடி, உள்ளது உள்ளபடி, எது எப்படி உள்ளதோ அப்படியே, எது உள்ளதோ அதுவே** (AS IS WHERE IS, AS IS WHAT IS, WHATEVER IT IS, WHATEVER THERE IS) என்ற நிபந்தனையின் பேரில், விற்பனையாளருக்கு எதிராக எவ்விதக் கோரிக்கை உரிமையும் இல்லாத (NON-RECOURSE) அடிப்படையில் ஏலம் விடப்பட உள்ளன என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

அமிட்டம் எண்.1:

விவரங்கள்	ரிசர்வ் விலை (தொகை ரூ.)	EMD (தொகை ரூ.)
6.70 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலம், அமுதம் காலனி மற்றும் செங்கம் நகர், அத்திப்பட்டு கிராமம், எண்ணூர் துறைமுகம் அருகே, பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் சென்னை 600 120-ல் உள்ளது.	10,89,90,000	1,08,99,000

முக்கிய குறிப்புகள்:

1. விற்பனையானது, எந்த வகையான உத்தரவாதங்கள் மற்றும் இழப்பீடுகளும் இல்லாமல், **உள்ள இடத்தில உள்ளபடி, உள்ளது உள்ளபடி, எது எப்படி உள்ளதோ அப்படியே, எது உள்ளதோ அதுவே** (AS IS WHERE IS, AS IS WHAT IS, WHATEVER IT IS, WHATEVER THERE IS) என்ற நிபந்தனையின் பேரில், விற்பனையாளருக்கு எதிராக எவ்விதக் கோரிக்கை உரிமையும் இல்லாத (NON-RECOURSE) அடிப்படையில் நடைபெறும்.
2. சொத்துக்கள், செலுமுறை மற்றும் காலக்கெடு பற்றிய விவரங்கள் செலுமுறை ஆவணத்தில குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்கூறிய மின்னணு ஏல செலுமுறை ஆவணம், மின்னணு ஏல தளமான https://ibbi.baanknet.com/eauction-ibbi/home என்ற இணையதளத்தில் கிடைக்கும். மேலும் செலுமுறை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் அனைத்து தரப்பினருக்கும் பொருந்தும் மற்றும் அவர்களை கட்டுப்படுத்தும்.
3. நொடித்தல் மற்றும் திவால்நிலைச் சட்டம், 2016 (IBC) மற்றும் கலைப்பு ஒழுங்குமுறைகளின் விதிகளுக்கு உட்பட்டு, எந்தவொரு காரணத்தையும் கூறாமல், எந்தவொரு கட்டத்திலும், எதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது மின்னணு ஏலத்தை ஒத்திவைக்கவோ/ தள்ளிவைக்கவோ/ ஏத்துசெய்யவோ/ மாற்றியமைக்கவோ/ நிறுத்தவோ அல்லது சொத்துக்களை ஏலத்திலிருந்து திரும்பப் பெறவோ கலைப்பு அலுவலருக்கு முழு உரிமை உண்டு.
4. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் செலுமுறை ஆவணத்தில குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கட்டாயமாகப் படித்து ஒப்புக்கொண்ட பின்னரே இச்செலுமுறையில் பங்கேற்க வேண்டும். மேலும், ஆர்வமுள்ள ஏலதார், நொடித்தல் மற்றும் திவால்நிலை சட்டம் 2016-இன் பிரிவு 29A-ல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி அளவுகோல்களை பூர்த்தி செய்தலாகி, அவர் ஏலத்தை சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார். எந்தவொரு ஏலதார்கள், பொருத்தக்கூடிய அளவிற்கு, இச்சட்டத்தின் பிரிவு 29A-இன் கீழ் தாங்கள் தகுதியற்றவர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்தும் உறுதிமொழிப் பத்திரத்தை (undertaking) சமர்ப்பிக்க வேண்டும். ஏலம் செயல்முறையின் எந்தவொரு கட்டத்திலும் ஏதேனும் ஏலதார் தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், அத்தகைய ஏலதார் செலுத்திய முன்வைப்புத் தொகை (EMD) முழுமையாகப் பறிமுதல் செய்யப்படும்.

ஆர்வத்தை வெளிப்படுத்துதல்: 08-12-2026 அன்று அல்லது அதற்கு முன்
மின்னணு ஏலத் தேதி: 11-12-2026

ஆர்வமுள்ள நபர் கூடுதல் விவரங்களுக்கு கலைப்பு அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம்,

ஆர்.வெங்கடகிருஷ்ணன்
கலைப்பு அலுவலர் - IBBI/IPA-001/IP-P00115/2017-18/10250
தொலைபேசி : 044-28150540, 28150541, 28150542
மொபைல் : +91 98408 13918
மின்னஞ்சல்: stjohn.cirp@rvkassociates.com / rvk@rvkassociates.com

நாள்: 13-11-2026
இடம் : சென்னை

பொது அறிவிப்பு

ஆட்டோ லைனர்ஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடெட்
(CIN:U34103TN1960PTC004184)

பதிவு அலுவலகம் : ஷட்டர் A14-15, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032, தொலைபேசி 044.42888111 மின்னஞ்சல்: autolinersprivatelimited@gmail.com

என்ற விஷயத்தில்

பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் இணையதளத்தில் உள்ள நிறுவனத்தின் பொறுப்புப் பட்டியலிலிருந்து, முழுமையாகத் தீர்க்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்கள் நீக்கப்படுவது தொடர்பாக, பொதுமக்களுக்கும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஓர் அறிவிப்பு.

மேற்கண்ட பொருள் தொடர்பாக, எங்கள் நிறுவனமான **ஆட்டோ லைனர்ஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடெட் (CIN: U34103TN1960PTC004184)**, டிசம்பர் 31, 2004 தேதியிட்ட பங்குதாரர்கள் ஒப்பந்தத்தின்படி M/s. RR இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (ஹோல்டிங் கம்பெனி) நிறுவனத்தை கையகப்படுத்தப்பட்டது மற்றும் பங்குகள் மாற்றப்பட்ட பிறகு இயக்குநர்கள் குழு மறுசீரமைக்கப்பட்டது. பழைய நிர்வாகத்திடமிருந்து நிறுவனம் கையகப்படுத்தப்பட்ட தேதியில், 31.12.2004 அன்று நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பில் வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடம் நிலுவையில் உள்ள கடன்கள் எதுவும் இல்லை. பழைய நிர்வாகம், பின்வரும் பொறுப்பு அடையாளங்களில் (Charge IDs) குறிப்பிடப்பட்டுள்ளபடி, வங்கிகளுடனான அனைத்து கடன்களையும் செலுத்திவிட்டது. இருப்பினும், பின்வரும் பொறுப்புகள் நிறுவனத்தின் பொறுப்புகளின் குறியீட்டில் (Index of Charges) இன்னும் பிரதிபலிக்கின்றன. கீழே விரிவாகப் பட்டியலிடப்பட்டுள்ள பொறுப்பு அடையாளங்களை குறியீட்டிலிருந்து நீக்குவதற்கு தடையில்லாச் சான்றிதழ் (NOC) பெறுவதற்காக வங்கியாளர்களுடன் பலமுறை முயற்சி செய்தும், தொடர்பு கொண்டும், வங்கிகளிடமிருந்து (பொறுப்புதாரர்) எந்தப் பதிலும் வரவில்லை.

வ. எண்	பொறுப்பு ஐடி	பொறுப்பு வைத்திருப்பவரின் பெயர்	உருவாக்கம்/மாற்றம் செய்யப்பட்ட தேதி	பொறுப்புத் தொகை (ரூ)
1	90301456	இந்தியன் வங்கி, சேத்துப்பட்டு கிளை	06.04.1979, Creation	3,00,000/-
2	90299140	இந்தியன் வங்கி, சேத்துப்பட்டு கிளை	13.05.1988, Modified	3,00,000/-
3	90302390	இந்தியன் வங்கி, சேத்துப்பட்டு கிளை	23.03.1980, Creation	72,000/-
4	90299223	Tamilnadu Investment Corp. Ltd	08.09.1980, Creation	1,15,000/-
5	90299287	இந்தியன் வங்கி, சேத்துப்பட்டு கிளை	11.06.1981, Creation 13.05.1988, Modified	3,00,000/-
6	90300059	இந்தியன் வங்கி, சேத்துப்பட்டு கிளை	25.02.1991, Creation	13,00,000/-
7	90300528	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, அண்ணாசாலை	22.07.1995, Creation 07.08.1996, Modified	65,00,000/-
8	90300553	Apple Credit Corp Ltd	10.10.1995, Creation	4,00,000/-

அதன்படி, MCA போர்டலில் பராமரிக்கப்படும் பொறுப்புகளின் அட்டவணையிலிருந்து மேற்கூறிய பொறுப்பு அடையாள எண்களை நீக்குவதற்காக,/அகற்றுவதற்காக நிறுவனம் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் நிறுவனப் பதிவாளரிடம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மேற்கூறிய பொறுப்பு உரிமைகளை முன்மொழியப்பட்ட நீக்கம் / அகற்றுதல் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை அல்லது உரிமைக்கோரல் உள்ள எந்தவொரு நபரும், அதனை துணை ஆவணங்களுடன் எழுத்துப்பூர்வமாக, நிறுவனங்களின் பதிவாளர், பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகம், பிளாக் எண் 6, B பிரிவு, 2வது தளம், சாஸ்திரி பவன், ஹேடோஸ் சாலை, சென்னை 600 034 மற்றும் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் அலுவலகத்திற்கு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்கலாம். நிறுவனம் பொருந்தக்கூடிய சட்டத்திற்கு உட்பட்டு தேவையான சட்டப்பூர்வ நடைமுறைகளை மேற்கொள்ளும்.

ஆட்டோ லைனர்ஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்காக
ஒப்பம்/-
ரவி ராமன்
இயக்குனர்
DIN 00120410

இடம்: சென்னை
தேதி: 11.11.2026



அறிவிப்பு

சுந்தரம் மியூச்சுவல்
சுந்தரம் பைனான்ஸ் குரூப்

வருமானப் பகிர்வு மற்றும் மூலதனம் திரும்பப் பெறுவதற்கான பதிவு தேதி (IDCW)

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் அறங்காவலரான சுந்தரம் ட்ரஸ்டீ கம்பெனி லிமிடெட், பின்வரும் திட்டங்களின் கீழ் ரூ. 10/- முகமதிப்பின் மீது வருமான விநியோகம் மற்றும் மூலதனத் திரும்பப் பெறுதல் (IDCW) ஆகியவற்றை அறிவித்துள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்:

திட்டத்தின் பெயர்	திட்டம்	விருப்பம்	பதிவு தேதி*	IDCW தொகை (ஒரு யூனிட்டுக்கு ரூ.)	ஒரு யூனிட்டுக்கு NAV நவம்பர் 11, 2026 (ரூ.) அன்று
சுந்தரம் அக்ரசிவ் ஹைபிரிட் ஃபண்ட்	வழக்கமான திட்டம்	மாதாந்திர IDCW	நவம்பர் 17, 2026	0.210	24.3473
	நேரடி திட்டம்	மாதாந்திர IDCW		0.330	38.3391
சுந்தரம் டைனமிக் அசெட் அலோகேஷன் ஃபண்ட் (முன்பு சுந்தரம் பேலன்ஸ்டு அட்வான்டேஜ் ஃபண்ட் என்று அழைக்கப்பட்டது)	வழக்கமான திட்டம்	மாதாந்திர IDCW		0.115	14.0520
	நேரடி திட்டம்	மாதாந்திர IDCW		0.140	17.5368

அல்லது குறிப்பிட்ட தேதி வணிகம் அல்லாத நாளாக இருந்தால் அதற்கு அடுத்த வணிக நாள்.
* பொருந்தக்கூடிய வகையில், மூலத்தில் பிடித்தம் செய்யப்படும் வரியைக் கழித்த பிறகு வருமானப் பகிர்வு மேற்கொள்ளப்படும் / IDCW (வருமானப் பகிர்வுத் தொகை) வழங்கப்படும்.

IDCW (வருமான விநியோகத் தொகை) வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அத்திட்டத்தின் நிகர சொத்து மதிப்பு (NAV) அத்தொகை மற்றும் பொருந்தக்கூடிய சட்ட்ரீதியான வரிகளின் அளவிற்கு ஏற்ப குறையும். IDCW வழங்கலானது, மேலே குறிப்பிடப்பட்ட ஒரு யூனிட்டிற்கான IDCW தொகை அல்லது 'பதிவுத் தேதியில்' (Record Date) கிடைக்கக்கூடிய விநியோகிக்கத்தக்க உபரித் தொகை - இவற்றில் எது குறைவோ, அந்த அளவிற்கு அமையும். கடந்த காலச் செயல்பாடு எதிர்காலத்திலும் தொடரும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்களின் IDCW விருப்பத் தேர்வின் கீழ் உள்ள யூனிட் உரிமையாளர்களில், அந்தந்த 'பதிவுத் தேதியில்' யூனிட் உரிமையாளர் பதிவேட்டில் பெயர்கள் இடம்பெற்றுள்ள அனைவரும் IDCW-ஐப் பெறத் தகுதிய

நெல்லையப்பர் கோயிலில் நாளை மறுநாள் சூரசம்ஹாரம்

திருநெல்வேலி, நவ. 12: திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்-காந்திமதியம்மன் திருக்கோயிலில் கந்தசஷ்டி விழா சூரசம்ஹாரம் ஞாயிற்றுக்கிழமை (நவ. 15) நடைபெற உள்ளது.

இதையொட்டி, மாலை 4 மணிக்கு சுப்பிரமணியர் வடக்கு வாசல் வழியாகவும், சண்முகர் சுவாமி சந்நிதி வழியாகவும் கோயிலுக்கு வெளியில் வந்து பின்னர் இருவரும் இணைந்து கீழ ரத வீதி, தெற்கு ரத வீதி சென்று திருநெல்வேலி நகரம் காவல் நிலையம் அருகில் முதல் சூரசம்ஹாரமும், கூலக்கடை பஜார் அருகில் இரண்டாவது சூரசம்ஹாரமும், லாலா சத்திர முக்கில் மூன்றாவது சூரசம்ஹாரமும் நடைபெற உள்ளன. திங்கள்கிழமை (நவ. 16) இரவு 8 மணிக்கு ஆறுமுக நயினார் சந்நிதியில் தெய்வானை திருக்கல்யாணம் நடைபெற உள்ளது. தொடர்ந்து, 17, 18, 19 ஆகிய தேதிகளில் அதே சந்நிதியில் ஊஞ்சல் திருவிழா நடைபெறும்.

யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா 108-ஆவது நிறுவன தின விழா



குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கிவைத்த யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா திருநெல்வேலி மண்டலத் தலைவர் டாக்டர் வி.கே.ஆதர்ஷ்.

திருநெல்வேலி, நவ.12: பாளையங்கோட்டையில் உள்ள மகாலில் யூனியன் பேங்க் ஆஃப் இந்தியாவின் 108-ஆவது நிறுவன தின விழா கொண்டாடப்பட்டது.

'ஒன்றிணைந்து ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவோம்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடைபெற்ற இவ்விழாவில் வங்கியின் திருநெல்வேலி மண்டலத் தலைவர் டாக்டர் வி.கே. ஆதர்ஷ், துணைத் தலைவர் க.பால விநாயகம் ஆகியோர் வாழ்த்து ரையாற்றினர்.

மண்டலத் தலைவர் பேசுகையில், 'வளர்ச்சி மற்றும் தேசத்தின் முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்புடன், வங்கி கடந்து வந்த 108 ஆண்டுகாலப் பயணத்தை நினைவுகூரும் வகையில் இவ்விழா அமைந்துள்ளது. மேலும் வங்கியின் பாரம்பரிய பெருமையை போற்றுவதற்கும், ஊழியர்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்கும், வாடிக்கையாளர்களுடனான உறவை மேம்படுத்துவதற்கும் இவ்விழா சிறந்த வாய்ப்பாகும்' என்றார்.

வங்கியின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு அளித்து வரும் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. வங்கி ஊழியர்களின் குழந்தைகள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் வங்கியின் வாடிக்கையாளர்கள், பணியாற்றும் மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் திரளாக கலந்துகொண்டனர்.

வரைவு பட்டியல் வெளியீடு

நெல்லை மாவட்டத்தில் 12,74,966 வாக்காளர்கள்

திருநெல்வேலி, நவ.12: திருநெல்வேலி மாவட்டத்தில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல்படி 12,74,966 வாக்காளர்கள் உள்ளனர்.

இம்மாவட்டத்திலுள்ள 5 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்குரிய ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஆட்சியர் ஆனந்த் மோகன் ஆட்சியர் அலுவலகத்தில் வெளியிட்டு, செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் 5 பேரவைத் தொகுதிகளிலும் சேர்த்து 6,21,170 ஆண் வாக்காளர்கள், 6,53,646 பெண் வாக்காளர்கள், 150 மூன்றாம் பாலின வாக்காளர்கள் என மொத்தம் 12,74,966 வாக்காளர்கள் உள்ளனர். நான்குனேரி, ராதாபுரத்தில் கூடுதலாக ஒரு வாக்குச்சாவடி உருவாக்கப்பட்டுள்ளது.



ஆட்சியர் அலுவலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன்.

வாக்காளர்கள் விவரம்

தொகுதி	ஆண்	பெண்	மூன்றாம் பாலினம்	மொத்தம்
திருநெல்வேலி	1,34,299	1,43,139	80	2,77,518
அம்பாசமுத்திரம்	1,11,408	1,18,908	13	2,30,329
பாளையங்கோட்டை	1,25,408	1,33,052	18	2,58,478
நான்குனேரி	1,27,399	1,31,836	13	2,59,248
ராதாபுரம்	1,22,656	1,26,711	26	2,49,393
மொத்தம்	6,21,170	6,53,646	150	12,74,966

சிறப்பு முகாம்: மேலும், நவ.21, 22, 29 ஆகிய தேதிகளில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற வுள்ள சிறப்பு முகாம்களிலும் மனு அளிக்கலாம். www.voters.eci.gov.in என்ற இணையதளம் மூலமாகவும், ECINet என்கிற கைப்பேசி செயலி மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். மேலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூலம் ஆகஸ்ட் செயலி வாயிலாகவும் பதிவேற்றம் செய்திடலாம்.

கூடுதல் விவரங்களுக்கு வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் அல்லது கட்டணமில்லா தொலைபேசி எண்.1950-இல் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் கா.பிரியா, மாவட்ட வருவாய் அலுவலர் ச.வித்யா, திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் பிரியா, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அனிதா, தேர்தல் வட்டாட்சியர் முருகன், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டம்...



41 மாத பணி நீக்கக் காலத்தை பணி காலமாக அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்தி, பாளை.யில் வியாழக்கிழமை நியாய தராசு ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணியாளர்கள் சங்கத்தினர்.

நெல்லை அருகே 1.5 டன் ரேஷன் அரிசி பறிமுதல்

திருநெல்வேலி, நவ.12: திருநெல்வேலி அருகே காரில் கடத்திவரப்பட்ட 1.5 டன் ரேஷன் அரிசியை போலீஸார் பறிமுதல் செய்து, இருவரை கைது செய்தனர்.

திருநெல்வேலி குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை உதவி ஆய்வாளர் ஜெயலட்சுமி தலைமையிலான போலீஸார் மூலக்கரைப்பட்டி அருகே புதன்கிழமை ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக வந்த காரில் கடத்திவரப்பட்ட 1500 கிலோ ரேஷன் அரிசியைப் பறிமுதல் செய்தனர். கார் ஓட்டுநர் தூத்துக்குடி மாவட்டம், பேய்க்குளம், கீழ அம்பலசேரியைச் சேர்ந்த டேவிட்(26), உடனிருந்த சாத்தான்குளம், புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த ஜெயசீலன்(66) ஆகியோரை கைது செய்து விசாரித்தனர். அதில் தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் வேலை செய்யும் வடமாநில தொழிலாளர்களுக்கு அதிக விலைக்கு விற்பதற்காக ரேஷன் அரிசியை கடத்தியது தெரியவந்தது.

நெல்லையில் நாளை ரேஷன் குறைதீர் கூட்டம்

திருநெல்வேலி, நவ. 12: திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்டம் சனிக்கிழமை (நவ.14) நடைபெறுகிறது.

இதில், புதிதாக குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை, நகல்அட்டை, குடும்ப அட்டையில்கைப்பேசிஎண் பதிவு / மாற்றம் கோரி விண்ணப்பிக்கலாம். ஆதார் அட்டை, பிறப்பு-இறப்புச் சான்று, குடியிருப்பு முகவரி உள்ளிட்ட ஆவணங்கள் கைப்பேசி ஆகியவற்றை கொண்டு செல்ல வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலக பொது விநியோகத் திட்ட கட்டுப்பாட்டு அறை (9342471314), சென்னை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலகம் (கட்டணமில்லா தொலைபேசி எண்கள் 1967, 18004255901) ஆகியவற்றிலும் புகார் தெரிவிக்கலாம் என ஆட்சியர் ஆனந்த் மோகன் தெரிவித்துள்ளார்.

ரேஷன் கடை ஊழியருக்கு மிரட்டல்: 3 பேர் கைது

திருநெல்வேலி, நவ.12: திருநெல்வேலி அருகே ரேஷன் கடை விற்பனையாளருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக சிறுவன் உள்பட 3 பேரை போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.

சீதபற்பநல்லூர், சிறுக்கன்குறிச்சியைச் சேர்ந்தவர் அருண்குமார்(35). கீழகருவநல்லூர் பகுதியில் உள்ள ரேஷன் கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 10 ஆம் தேதி ரேஷன் கடையில் பணியில் இருந்த அவரை சிலர் முன்விரோதம் காரணமாக அவதூறாகப் பேசி கொலை மிரட்டல் விடுத்தனராம். இதுகுறித்த புகாரின்பேரில் பாளை. போலீஸார் வழக்குப்பதிந்து அவரை கைது செய்தனர்.

பணம் பறிக்க முயற்சி: பாளையங்கோட்டை, மனக்காவலம் பிள்ளை நகர், காளியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் செல்வக்குமார்(35). இவர் புதன்கிழமை சாந்திநகர் மணிக்கூண்டு அருகே நின்ற முதியவரிடம் கத்தியைக் காண்பித்து மிரட்டி பணம் கேட்டாராம். இதுகுறித்த புகாரின்பேரில் பாளை. போலீஸார் வழக்குப்பதிந்து அவரை கைது செய்தனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

திருநெல்வேலி

மாவட்ட நிர்வாகம்: குழந்தைகள் தினத்தை முன்னிட்டு அரசுப்பள்ளி மாணவர்களுக்கு கேக் மற்றும் முதல்வரின் வாழ்த்து அட்டை வழங்கும் நிகழ்வு, பங்கேற்பு – மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன், மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி, கல்லணை, திருநெல்வேலி நகரம், காலை 10.30.

சாலை குமார சுவாமி கோயில்: கந்தசஷ்டி 4 ஆம் நாள் சிறப்பு வழிபாடு, திருநெல்வேலி சந்திப்பு, காலை மற்றும் மாலை 6.30.

ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ் ஆட்சிமொழிப் பயிலரங்கம்

திருநெல்வேலி, நவ.12: தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதன், வியாழன் ஆகிய இரு தினங்கள் ஆட்சிமொழிப் பயிலரங்கம்-கருத்தரங்கு நடைபெற்றது.

முதல் நாள் பயிலரங்கை மாவட்ட வருவாய் அலுவலர் ச.வித்யா தொடங்கி வைத்து, தலைமை உரையாற்றினார். 'மொழிப்பயிற்சி' என்னும் தலைப்பில் தேனி வையைத் தமிழ்ச் சங்க நிறுவனர் ச. ந. இளங்குமரனும், 'மொழிபெயர்ப்பும், கலைச் சொல்லாக்கமும்' என்னும் தலைப்பில் மானூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் கா. சரவணகுமாரும், 'அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல்' என்னும் தலைப்பில் பாளையங்கோட்டை வட்டாட்சியர் செ. மாரிராஜாவும், 'கணினித் தமிழ்' என்னும் தலைப்பில் சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி உதவிப் பேராசிரியர் க. அ. முகம்மது ரியாசுதீனும், தமிழ்நாடு புத்தொழில், திட்ட அலுவலர் செ.ஜிஜின் துரையும் பயிற்சி அளித்தனர்.

2-ஆவது நாளான வியாழக்கிழமை 'ஆட்சிமொழி வரலாறு- சட்டம்' என்னும் தலைப்பில் சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் ச.மகாதேவனும், 'அலுவலக ஆய்வும், குறைகளைவு நடவடிக்கைகளும்' என்னும் தலைப்பில் திருநெல்வேலி மாவட்ட தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் செ. கனகலட்சுமியும், 'ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க அரசாணை' என்னும் தலைப்பில் மண்டல தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர் பெ. இளங்கோவும் பயிற்சி அளித்தனர். இதில், 100-க்கும் மேற்பட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.



பயிலரங்கில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கிய ஆட்சியர் ஆனந்த் மோகன்.

தொடர்ந்து நடைபெற்ற, ஆட்சிமொழிக் கருத்தரங்கில் மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன் கலந்து கொண்டு, ஆட்சிமொழிப் பயிலரங்கில் பயிற்சி பெற்றவர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) த.அனிதா, மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் பெ. இளங்கோ, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ம.கயிலைச் செல்வம், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டு மைய பொருளாளர் இ. மதார் முகைதீன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கல்லூரி மாணவர் தூக்கிட்டுத் தற்கொலை

திருநெல்வேலி, நவ.12: மேலப்பாளையம் அருகே கல்லூரி மாணவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

மேலப்பாளையம் அருகேஉள்ள நாகம்மாள்புரத்தைச் சேர்ந்த பெருமாள் மகன் பிரித்விராஜ்(20). கல்லூரி மாணவர். இவர் வியாழக்கிழமை வீட்டில் இருந்த போது தூக்கிட்டுத் தற்கொலைக்கு முயன்றாராம். உறவினர்கள் அவரை மீட்டு திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

மற்றொரு சம்பவம்: பாளையங்கோட்டை பெருமாள்புரம், ரெட்டியார்பட்டியைச் சேர்ந்த தங்கையா மகன் மணிகண்டன்(25). சம்பவத்தன்று இரவு வீட்டில் தூங்கிய இவர், மறுநாள் காலையில் மயக்க நிலையில் கிடந்தாராம். குடும்பத்தினர் அவரை திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவங்கள் குறித்து முறையே மேலப்பாளையம், பெருமாள்புரம் போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

செயிண்ட் ஜான் ஃபிரெய்ட் சிஸ்டம்ஸ் லிமிடெட்
நிறுவனச் சொத்தின் மின்னணு ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு
நொடித்தல் மற்றும் திவால்நிலைச் சட்டம், 2016ன் கீழ் கலைப்பு நடவடிக்கையில் உள்ளது
தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு 26-11-2019 தேதியிட்ட உத்தரவு (11-03-2020 முதல் அமலுக்கு வருகிறது)

BAANKNET இணையதளம் மூலம் M/s. செயிண்ட் ஜான் ஃபிரெய்ட் சிஸ்டம்ஸ் லிமிடெட்டுக்குச் சொந்தமான கீழே குறிப்பிட்டுள்ள சொத்துகள், எந்த உத்தரவாதங்களும் இழப்பீடுகளும் இல்லாமல், உள்ள இடத்தில் உள்ளபடி, உள்ளது உள்ளபடி, எது எப்படி உள்ளதோ அப்படியே, எது உள்ளதோ அதுவே (AS IS WHERE IS, AS IS WHAT IS, WHATEVER IT IS, WHATEVER THERE IS) என்ற நிபந்தனையின் பேரில், விற்பனையாளருக்கு எதிராக எவ்விதக் கோரிக்கை உரிமையும் இல்லாத (NON-RECOURSE) அடிப்படையில் ஏலம் விடப்பட உள்ளன என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

அமிட்டம் எண்.1:

விவரங்கள்	ரிசர்வ் விலை (தொகை ரூ.)	EMD (தொகை ரூ.)
6.70 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலம், அமுதம் காலனி மற்றும் செங்கம் நகர், அத்திப்பட்டு கிராமம், எண்ணூர் துறைமுகம் அருகே, பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் சென்னை 600 120-ல் உள்ளது.	10,89,90,000	1,08,99,000

முக்கிய குறிப்புகள்:
1. விற்பனையானது, எந்த வகையான உத்தரவாதங்கள் மற்றும் இழப்பீடுகளும் இல்லாமல், உள்ள இடத்தில் உள்ளபடி, உள்ளது உள்ளபடி, எது எப்படி உள்ளதோ அப்படியே, எது உள்ளதோ அதுவே (AS IS WHERE IS, AS IS WHAT IS, WHATEVER IT IS, WHATEVER THERE IS) என்ற நிபந்தனையின் பேரில், விற்பனையாளருக்கு எதிராக எவ்விதக் கோரிக்கை உரிமையும் இல்லாத (NON-RECOURSE) அடிப்படையில் நடைபெறும்.
2. சொத்துக்கள், செயல்முறை மற்றும் காலக்கெடு பற்றிய விவரங்கள் செயல்முறை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்கூறிய மின்னணு ஏல செயல்முறை ஆவணம், மின்னணு ஏல தளமான https://ibbi.baanknet.com/eauction-ibbi/home என்ற இணையதளத்தில் கிடைக்கும். மேலும் செயல்முறை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் அனைத்து தரப்பினருக்கும் பொருந்தும் மற்றும் அவர்களைக் கட்டுப்படுத்தும்.
3. நொடித்தல் மற்றும் திவால்நிலைச் சட்டம், 2016 (IBC) மற்றும் கலைப்பு ஒழுங்குமுறைகளின் விதிகளுக்கு உட்பட்டு, எந்தவொரு காரணத்தையும் கூறாமல், எந்தவொரு கட்டத்திலும், ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது மின்னணு ஏலத்தை ஒத்திவைக்கவோ/ தள்ளிவைக்கவோ/ ரத்துசெய்யவோ/ மாற்றியமைக்கவோ/ நிறுத்தவோ அல்லது சொத்துக்களை ஏலத்திலிருந்து திரும்பப் பெறவோ கலைப்பு அலுவலருக்கு முழு உரிமை உண்டு.
4. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் செயல்முறை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கட்டாயமாகப் படித்து ஒப்புக்கொண்ட பின்னரே இச்செயல்முறையில் பங்கேற்க வேண்டும். மேலும், ஆர்வமுள்ள ஏலதாரர், நொடித்தல் மற்றும் திவால்நிலை சட்டம் 2016-இன் பிரிவு 29A-ஐ குறிப்பிடப்பட்டுள்ள தகுதி அளவுகோல்களை பூர்த்தி செய்தாலன்றி, அவர் ஏலத்தை சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார். வருங்கால ஏலதாரர்கள், பொருந்தக்கூடிய அளவிற்கு, இச்சட்டத்தின் பிரிவு 29A-இன் கீழ் தாங்கள் தகுதியற்றவர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்தும் உறுதிமொழிப் பத்திரத்தை (undertaking) சமர்ப்பிக்க வேண்டும். ஏலச் செயல்முறையின் எந்தவொரு கட்டத்திலும் ஏதேனும் ஏலதாரர் தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், அத்தகைய ஏலதாரர் செலுத்திய முன்பைப்புத் தொகை (EMD) முழுமையாகப் பறிமுதல் செய்யப்படும்.

ஆர்வத்தை வெளிப்படுத்துதல்: 08-12-2026 அன்று அல்லது அதற்கு முன்
மின்னணு ஏலத் தேதி: 11-12-2026
ஆர்வமுள்ள நபர் கூடுதல் விவரங்களுக்கு கலைப்பு அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம்,
ஆர்.வெங்கடகிருஷ்ணன்
கலைப்பு அலுவலர் - IBBI/IPA-001/IP-P00115/2017-18/10250
நாள்: 13-11-2026 **தொலைபேசி : 044-28150540, 28150541, 28150542**
இடம் : சென்னை **மொபைல் : +91 98408 13918**
மின்னஞ்சல்: stjohn.cirp@rvkassociates.com / rvk@rvkassociates.com

CHANGE OF NAME
I, **RAMALINGAM K** born on **16.03.1984** (Native district :Tirunelveli) Residing at Door No.28, North Utchimakali Amman Kovil Street, Palayam kottai, Tirunelveli, Tamil Nadu – 627 002 shall henceforth be known as **MOHAMMED (RAMALINGAM K)**
TIRUNELVELI
12 November, 2026

राष्ट्रीय प्रौद्योगिकी संस्थान पुडुचेरी
(शिक्षा मंत्रालय के अधीन राष्ट्रीय महत्व का एक संस्थान, भारत सरकार)
तिरुवेट्टकुडी, कराईकल - 609 609, केंद्र शासित प्रदेश पुडुचेरी
NATIONAL INSTITUTE OF TECHNOLOGY PUDUCHERRY
(An Institution of National Importance under Ministry of Education, Govt of India)
Thiruvettakudy, Karaikal - 609 609, Union Territory of Puducherry.

दिनांक /Date: 13.11.2026

भर्ती के लिए अधिसूचना

राष्ट्रीय प्रौद्योगिकी संस्थान पुडुचेरी, नीचे दिए गए विज्ञापन के अनुसार निर्धारित गैर-शिक्षण पदों & शिक्षण पदों के लिए भारतीय नागरिकों से आवेदन आमंत्रित करता है:

1. प्रतिनियुक्ति (जिसमें अल्पावधि अनुबंध भी शामिल है)- Advt. No. : NITPY/01/2026/NT(DSTCY)/13112026, दिनांक : 13.11.2026
2. गैर-भर्ती - Advt. No. : NITPY/02/2026/NT/13112026, दिनांक: 13.11.2026
3. गैर-भर्ती - Advt. No. : NITPY/03/2026/T/13112026, दिनांक: 13.11.2026

गैर-शिक्षण पदों & शिक्षण पदों के लिए आवश्यक विवरण योग्यता की सेवाशर्तें वेबसाइट पर उपलब्ध किया जा रहा है: http://www.nitpy.ac.in.

NOTIFICATION FOR RECRUITMENT

National Institute of Technology Puducherry invites applications from Indian Nationals for various **Non-Teaching & Teaching Positions**, as per the advertisements below:
1. Deputation, including Short Term Contract - Advt. No. NITPY/01/2026/NT(DSTCY)/13112026, Date: 13.11.2026
2. Direct Recruitment - Advt. No. NITPY/02/2026/NT/13112026, Date: 13.11.2026
3. Direct Recruitment - Advt. No. NITPY/03/2026/T/13112026, Date: 13.11.2026

The details required for **Non-Teaching & Teaching** posts can be downloaded from the Institute website http://www.nitpy.ac.in.

-SD- / ఎం. Director / निदेशक

இண்டியன் பேங்க் Indian Bank
காா்ப்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.

செயல்படாத கணக்குகளை செயல்படுத்துவதற்கான பொது அறிவிப்பு

எங்கள் வங்கியில் உள்ள சில கணக்குகள் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக வாடிக்கையாளர்களால் பரிவர்த்தனை எதுவும் செய்யப்படாமல் உள்ளன என்பதை வங்கி கண்டறிந்துள்ளது.
செயல்படாத கணக்குகளை வைத்திருப்பவர்கள், ஆதார் / ஓட்டுநர் உரிமம் / வாக்காளர் அடையாள அட்டை போன்ற புதிய **KYC** ஆவணங்களைச் சமர்ப்பித்து, உங்களுடைய கிளை அல்லது அருகிலுள்ள இந்தியன் வங்கி கிளைக்குச் சென்று தங்கள் கணக்குகளை மீண்டும் செயல்படுத்தும்படி இதன்மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.
சந்தேகமோ அல்லது உதவியோ தேவைப்பட்டால், தயவுசெய்து உங்கள் அருகிலுள்ள இந்தியன் வங்கிக் கிளையைத் தொடர்பு கொள்ளுங்கள்.

Follow us on:

அறிவிப்பு

சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப்

வருமானம் பகிர்வு மற்றும் மூலதனம் திரும்பப் பெறுவதற்கான பதிவு தேதி (IDCW)

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் அறங்காவலரான சுந்தரம் ட்ரஸ்டீ கம்பெனி லிமிடெட், பின்வரும் திட்டங்களின் கீழ் ரூ. 10/- முகமதிப்பின் மீது வருமான விநியோகம் மற்றும் மூலதனத் திரும்பப் பெறுதல் (IDCW) ஆகியவற்றை அறிவித்துள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்:

திட்டத்தின் பெயர்	திட்டம்	விருப்பம்	பதிவு தேதி*	IDCW தொகை (ஒரு யூனிட்டுக்கு ரூ.)	ஒரு யூனிட்டுக்கு NAV நவம்பர் 11, 2026 (ரூ.) அன்று
சுந்தரம் அக்ரசிவ் ஹைபிரிட் ஃபண்ட்	வழக்கமான திட்டம்	மாதாந்திர IDCW	நவம்பர் 17, 2026	0.210	24.3473
	நேரடி திட்டம்	மாதாந்திர IDCW		0.330	38.3391
சுந்தரம் டைனமிக் அசெட் அலோகேஷன் ஃபண்ட் (முன்பு சுந்தரம் பேலன்ஸ்டு அட்வான்டேஜ் ஃபண்ட் என்று அழைக்கப்பட்டது)	வழக்கமான திட்டம்	மாதாந்திர IDCW		0.115	14.0520
	நேரடி திட்டம்	மாதாந்திர IDCW		0.140	17.5368

அல்லது குறிப்பிட்ட நேதி வணிகம் அல்லாத நாளாக இருந்தால் அதற்கு அடுத்த வணிக நாள்.
* பொருந்தக்கூடிய வகையில், மூலத்தில் பிடித்தம் செய்யப்படும் வரியைக் கழித்த பிறகு வருமானப் பகிர்வு மேற்கொள்ளப்படும் / IDCW (வருமானப் பகிர்வுத் தொகை) வழங்கப்படும்.

IDCW (வருமான விநியோகத் தொகை) வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அத்திட்டத்தின் நிகர சொத்து மதிப்பு (NAV) அத்தொகை மற்றும் பொருந்தக்கூடிய சட்டரீதியான வரிகளின் அளவிற்கு ஏற்ப குறையும். IDCW வழங்கலானது, மேலே குறிப்பிடப்பட்ட ஒரு யூனிட்டிற்கான IDCW தொகை அல்லது 'பதிவுத் தேதியில்' (Record Date) கிடைக்கக்கூடிய விநியோகிக்கத்தக்க உபரித் தொகை - இவற்றில் எது குறைவோ, அந்த அளவிற்கு அமையும். கடந்த காலச் செயல்பாடு எதிர்காலத்திலும் தொடரும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்களின் IDCW விருப்பத் தேர்வின் கீழ் உள்ள யூனிட் உரிமையாளர்களில், அந்தந்த 'பதிவுத் தேதியில்' யூனிட் உரிமையாளர் பதிவேட்டில் பெயர்கள் இடம்பெற்றுள்ள அனைவரும் IDCW-ஐப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: நவம்பர் 13, 2026

மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

காா்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஓயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

இந்தியா நிப்பான் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம் : எண். 11 & 13, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600 002.
போன் : 044-28460073. இணையதளம் : https://indianippon.com இமெயில் : investors@inel.co.in CIN : L31901TN1984PLC011021

30 செப்டெம்பர் 2025ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகளின் சாரம்

(ரூ. லட்சத்தில் பங்கொன்றுக்கு ஈட்டிய தொகை தவிர)

வ.எண்.	விவரங்கள்	காலாண்டு முடிய		அரையாண்டு முடிய	ஆண்டு முடிய
		30 செப்டெம்பர், 2026	30 செப்டெம்பர், 2025	30 செப்டெம்பர், 2026	31 மார்ச், 2026
		தணிக்கை யாகாதது	தணிக்கை யாகாதது	தணிக்கை யாகாதது	தணிக்கை யானது
1	செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் (நிகரம்)	34,748	27,256	65,196	1,06,848
2	வரிக்கு முந்தைய காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்)	2,853	3,208	6,337	14,601
3	வரிக்கு பிந்தைய காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்)	2,181	2,320	4,884	11,126
4	நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் / (நஷ்டம்) [நடப்புக் காலத்திற்கு வரிக்குப்பின் இலாபம் / (நஷ்டம்) மற்றும் வ